# முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

## O.S. No. 491/2022

**Witness PW 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜவேல் | தொழில் | |
| த/பெ | சுப்ரமணி | வயது | |
| ஊர் | | தேதி | 05.03.2025 |
| மாவட்டம்; | | | |

இன்று (05.03.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

நான் இந்த வழக்கில் நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்டு அது மறுத்துவிட்டதால் இந்நீதிமன்றம் என் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று காரணம் கேட்டு அறிவிப்பு அனுப்பப்பட்டு அதன் பேரில் நீதிமன்றத்தில் நான் காரணத்தை தெரிவித்திருந்தேன் அதனால் எனது வருகையின்மை மன்னிக்கப்பட்டு சாட்சியம் அளிக்க உத்தரவிடப்பட்டது. அதன் படி சாட்சியம் அளிக்கிறேன் . நான் வெட்டுக்காடு என்ற கிராமத்தில் வசித்து வருகிறேன் . இவ்வழக்கில் கண்ட வாதி வேல்முருகன் மற்றும் பிரதிவாதி தாமோதிர ராஜா ஆகியோர்களை தெரியும் . இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்தது . தற்போது என்னிடம் காட்டப்படும் வா .த.சா.ஆ 1 பிராமிசரி நோட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆனால் அது எதற்காக வாங்கினார்கள் என்றுஎனக்கு தெரியாது . தற்போது என்னிடம் காட்டப்படும் வா .த.சா.ஆ 2

பிராமிசரி நோட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆனால் அது எதற்காக வாங்கினார்கள் என்றுஎனக்கு தெரியாது.

**சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமரி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் கண்ட வாதி பிரதிவாதி இருவரும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். 15.05.2020 தேதியில் 25.05.2020 தேதியில் பிரதிவாதி வாதியிடம் கடன்பெற்று கொண்டு பிராமிசரி நோட் வா.த.சாஆ 1 மற்றும் 2 ஏற்படுத்தி கையெழுத்து போட்டு கொடுத்த போது நான் சாட்சியாக இருந்தேன் என்றால் சரியல்ல . நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் டிரைவர் தொழில் செய்கிறேன் எனது மனைவிக்கு மளிகை கடை வைத்து கொடுத்து நடத்தி வருகிறேன் . பிரதிவாதி எனக்கு நெருங்கிய உறவினர் என்பதாலும் மளிகை கடை வைக்க எனக்குஉதவியாக இருந்ததாலும் உண்மை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வேல்முருகன் எனக்கு சித்தப்பா உறவு என்றால் சரியல்ல எனக்கு மாமா . பிரதிவாதி தொலைக்காட்சி பழுது நீக்கும் கடை நடத்தி வருகிறார் என்றால்ச ரிதான் . பிரதிவாதி மாற்றுத் திறனாளி என்றால் சரிதான் . வாதி வேல்முருகன் வட்டி தொழில் செய்து வந்தார் அவர் சொல்பவரிடம் வட்டி வசூலிக்கும் வேலையை பிரதிவாதி செய்து வந்தார் என்றால் சரிதான். நானும் வாதியிடம் வட்டிக்கு வாங்கியுள்ளேன் என்றால் சரிதான் . வாதி என்னை வேறு வழக்கில் சாட்சியாக போட்டுள்ளார்கள் என்றால் இல்லை இந்த வழக்கில் தான்

சாட்சியாக போட்டுள்ளார். நான் கையெழுத்து போட்ட போது வா .த.சாஆ 1 மற்றும் வா.த. சாஆ 2 ஆகிய ஆவணங்கள் நிரப்பப்படாமல் இருந்தது என்றால் சரிதான். ஒருவரிடம் பணம் கொடுத்துள்ளேன் அவரிடம் பணம் வசூல் செய்ய வேண்டும் அதற்காக கையெழுத்து போட்டு கொடுங்கள் என்று கேட்டார் . யாரிடம் பணம் வசூலிக்க வேண்டும்என்று சொன்னாரா என்றால் இல்லை.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-A. Tamilselvan)
I Additional Subordinate Judge,
Villupuram